**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10022025-9812

Volume: 10

Issue: 2

Month: October

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.08.2025

Accepted: 20.09.2025

Published: 01.10.2025

Citation: Sankara Narayanan, K. "Canalization Artists: Sangam Literature and Tolkappiyam." Shanlax International Journal of Tamil Research, vol. 10, no. 2, 2025, pp. 36–46.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i2.9812

*Corresponding Author:
krksankaraatamil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Canalization Artists: Sangam Literature and Tolkappiyam

**Dr. K. Sankara Narayanan**
*Assistant Professor & Head (i/c), Sangappalagai for Tamil Development*
*University of Madras, Chennai*
*http://orcid.org/0000-0002-6260-8164*

**Abstract**

*The word canalization means to guide. Koothar, Panar, Porunar, and Viraliyar are called artists. Singing, dancing, and directing are their professions. References to these artists and some traditions related to them can be found in the Tolkappiyam. This article aims to present the records of these artists in the Sangam literature Pattuppattu and Ettutogai.*

***Keywords:*** *Canalization, Artists, Tholkappiyam, Sangam Literature, Koothar, Panar, Porunar, Viraliyar*

**References**

1. Elampooranar Urai. 2010,Tholkappiya Porulathikaaram Moolamum Uraium, Chennai, Saratha Publication
2. Sangam Literature, Ettuthogai - Vol I, 2014, Chennai New Century Book House
3. Sangam Literature, Ettuthogai - Vol II, 2014, Chennai New Century Book House
4. Sangam Literature, Ettuthogai - Vol III, 2014, Chennai New Century Book House
5. Sangam Literature Patthupattu - Vol I, 2014, Chennai New Century Book House
6. Sangam Literature Patthupattu - Vol II, 2014, Chennai New Century Book House
7. Subramaniam.Sa.Ve.Su., Sangam Literature, 2006, Chennai, Manivaasagar Publication
8. Tamillannal, Tholkappiyam Ezhuthathikaaram, Vol – I, 2006, Chennai, Manivasagar Publications
9. Tamillannal, Tholkappiyam Cholathikaaram, Vol – II, 2006, Chennai, Manivasagar Publications
10. Tamillannal, Tholkappiyam Porullathikaaram, Vol – III, 2006, Chennai, Manivasagar Publications
11. Perachiriyarin Urai, Tholkappiyam Porullathikaaram, 2017, Chennai, Amaravathi Publication.

# ஆற்றுப்படை கலைஞர்கள்: சங்க இலக்கியமும் தொல்காப்பியமும்

***முனைவர் கி. சங்கர நாராயணன்***
துறைத் தலைவர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*ஆற்றுப்படை என்ற சொல்லுக்கு வழிப்படுத்தல் என்று பொருள். கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோரைக் கலைஞர்கள் என்பர். பாடுவதும், ஆடுவதும், ஆற்றுப்படுத்துவதும் இவர்களின் தொழிலாகும். தொல்காப்பியத்தில் இந்தக் கலைஞர்கள் பற்றிய குறிப்பும் இதற்கான சில மரபுகளையும் காணமுடிகின்றது. சங்க இலக்கியமான பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகையில் இடம்பெறும் இக்கலைஞர்கள் குறித்த பதிவினை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *ஆற்றுப்படை, கலைஞர்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியம், கூத்தர், பாணர், பொருநர், விறலியர்*

## முன்னுரை

பரிசில் பெற்ற ஒருவன், பரிசில் பெறப்போகும் ஒருவனை ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படையின் இலக்கணமாகும். தொல்காப்பியத்தில் ஆற்றுப்படைக்கான இலக்கணத்தைக் காணமுடிகின்றது.

**கூத்தரும் பாணரும் பொருநரும்
விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு
அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ற பக்கமும்**
***(தொல்.1037)***

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் செல்வம் பெற்று வருபவர், வழியிடையே வரும் தம் போன்ற வறியவரைக் காணும்போது, பரிசு பெற்றவர்கள், பரிசில் பெறாதவர்களுக்கு இவ்வழிச் சென்று இன்ன தலைவனைக் கண்டால் நீங்களும் பரிசில் பெறுவீர் என வழி கூறுவர். இதுவே ஆற்றுப்படையின் இலக்கணம் என்கிறது தொல்காப்பியப் புறத்திணையியல்.

மேலும், தலைவன் தலைவியருடன் இணைபிரியாது பிணைக்கப்பட்ட வாயில்களாகத் தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகிய பன்னிருவர் இருப்பர் என்கிறது.

**தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப**
***(தொல்.1139)***

மேலும் முன்னிலையில் வரும் ஒருமைச் சொல் பன்மையுடன் முடியினும் நீக்கும் நிலைமை இன்று என்கிறது தொல்காப்பிய எச்சவியல். ஆற்றுப்படை இலக்கியத்தில் இங்ஙனம் வருவதைப் போற்றி ஏற்று கொள்ளவேண்டும். இது வழுவன்று என்கிறது தொல்காப்பியச் சொல்லதிகாரம்.

சங்க இலக்கியமான பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள தொல்காப்பியர் சுட்டும் ஆற்றுப்படை இலக்கண மரபிலுள்ள கூத்தர், பாணர்,

பொருநர், விறலியர் ஆகியோர் குறித்த பதிவுளை இனம்கண்டு எடுத்துரைப்பதாக இந்த ஆய்வு அமைகிறது.

**கூத்தர்**

சங்ககாலக் கலைஞர்களில் கூத்தர் சிறப்பிடம் பிடித்திருந்தனர். மேடை அமைத்து நாடகம் இயற்றும் கூத்தர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் அதிக அளவில் காணக்கிடைக்கின்றன. வேத்தியல் மற்றும் பொதுவியல் எனும் இரு கூத்து வகைகளை இயற்றும் கூத்தர்கள், அரசவைகளிலும் ஊர் மன்றங்களிலும் மேடை அமைத்து வேடமிட்டு கூத்து நிகழ்த்துவர். இக்கூத்து, இயல், இசை கலைகளின் கூட்டோடு மெய்ப்பாடு எனும் நாடகம் எனும் நடிப்பு கூறையும் தன் பால் கொண்டு இயங்குவதால் கூத்துகலையும் கூத்தர்களும் சங்ககாலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தனர்.

**கலித்தொகை**

***வீழ்க்கை பெரும் கரும் கூத்து***
***(கலி. 65:29)***

***செரு குறித்தாரை உவகை கூத்தாட்டும்***
***வரிசை பெரும் பாட்டொடு எல்லாம் பருகீத்தை***
***(கலி.85:34-35)***

**புறநானூறு**

***பூம் போது சிதைய வீழ்ந்து என கூத்தர்***
***ஆடுகளம் கடுக்கும் அக நாட்டையே***
***(புறம். 28:13-14)***

**பாணர்**

யாழ் மற்றும் மண்டை எனும் இசைக் கருவிகளை மீட்டும் கலைஞர்கள் பாணர் என்றும் இசைக்கருவிகளாலே யாழ்பாணர், மண்டைப்பாணர் எனும் பெயரும் பெற்றிருந்தனர். யாழ்களில் இடம்பெறும் நரம்புகளின் அடிப்படையில் மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், ஆதியாழ் எனும் பெயர்கள் உருவாயின. பாணர்கள் பரிசில் வேண்டி செல்லும் இடமெல்லாம் தங்கள் மனைவியரான பாடிணிகளையும் அழைத்து செல்வர். பாடினிகள் நாட்டியத்தில் வல்லவர்களாக இருந்தனர்.

**நற்றிணை**

***பாணன் கையது பண்பு உடை சீறியாழ்***
***(நற். 30:2)***

***பூண் அணி ஆகம் புலம்ப பாணர்***
***அயிர்ப்பு கொண்டு அன்ன கொன்றை அம் தீம் கனி***
***(நற். 46:5-6)***

***தொண்டகசிறுபறை பாணி அயலது***
***(நற். 104:5)***

***ஒன்று எறி பாணியின் இரட்டும்***
***(நற்.132:10)***

***பாணி கொண்ட பல் கால் மெல் உறி***
***(நற். 142:2)***

***பண் அமை நெடும் தேர் பாணியின் ஒலிக்கும்***
***(நற்.167:4)***

***விருந்தின் பாணர் விளர் இசை கடுப்ப***
***(நற்.172:7)***

***காணவும் நல்காய் ஆயின் பாணர்***
***பரிசில் பெற்ற விரி உளை நன் மான்***
***(நற். 185:3-4)***

***கை கவர் நரம்பின் பனுவல் பாணன்***
***செய்த அல்லல் பல்குவ வை எயிற்று***
***(நற். 200:8-9)***

***களிறு பெறு வல்சி பாணன் கையதை***
***(நற். 310:9)***

***முழங்கு திரை முழவின் பாணியின் பைபய***
***(நற்.378:3)***

**குறுந்தொகை**

***எவ்வி இழந்த வறுமை யாழ் பாணர்***
***பூ இல் வறும் தலை போல புல்லென்று***
***(குறு.19:1-2)***

*பதலை பாணி பரிசிலர் கோமான்*
***( குறு. 59:1)***

*யாணர் ஊரன் பாணன் வாயே*
***(குறு. 85:6)***

*ஒரு நின் பாணன் பொய்யன் ஆக*
***(குறு. 127:4)***

*உள்ள பாணர் எல்லாம்*
***(குறு. 127:5)***

*பாணியும் உடைத்து அது காணுநர் பெறினே*
***(குறு.136:5)***

*பாணர் பசு மீன் சொரிந்த மண்டை போல*
***(குறு. 169:4)***

*கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்*
***(குறி.194)***

*பாணர் படு மலை பண்ணிய எழாலின்*
***(குறு. 323:2)***

*வேந்தரொடு பொருத ஞான்றை பாணர்*
*புலி நோக்கு உறழ் நிலை கண்ட*
***(குறு. 328:6-7)***

*ஐங்குறுநூறு*

*பாணன் பொய்யன் பல் சூளினனே*
***(ஐங். 43:4)***

*பாணன் போல பல பொய்த்தல்லே*
***( ஐங். 47:5)***

*பாணர் நரம்பினும் இன் கிளவியளே*
***(ஐங். 100:4)***

*அம்ம வாழி தோழி பாணன்*
*சூழ் கழி மருங்கின் நாண் இரை கொளீஇ*
***(ஐங். 111:1-2)***

*பாணன் நல்லோர் நலம் சிதைக்கும்மே*
***( ஐங். 139:3)***

*நசையினன் வதிந்த கிடக்கை பாணர்*
*நரம்பு உளர் முரற்கை போல*
***(ஐங்.402:2-3)***

*நயந்த காதலி தழீஇ பாணர்*
*நயம்படு முரற்கையின் யாத்த பயன் தெரிந்து*
***(ஐங். 407:1-2)***

*பாணர் முல்லை பாட சுடர் இழை*
***(ஐங். 408:1)***

*பாணர் பெருமகன் பிரிந்து என*
***(ஐங். 458:3)***

*பெரிது புலம்பினனே சீறியாழ் பாணன்*
*எம் வெம் காதலொடு பிரிந்தோர்*
***(ஐங். 475:3-4)***

*நினக்கு யாம் பாணரேம் அல்லேம் எமக்கு*
***(ஐங். 480:1)***

பதிற்றுப்பத்து

*கழல் கண் கூகை குழறு குரல் பாணி*
*கரும் கண் பேய்மகள் வழங்கும்*
***(பதி. 22:36-37)***

*பரிசிலர் வெறுக்கை பாணர் நாள்அவை*
***(பதி. 38:9)***

*பாணர் பைம் பூ மலைய இளையர்*
***(பதி. 40:24)***

*பைம் பொன் தாமரை பாணர் சூட்டி*
***(பதி. 48:1)***

*பாணர் கையது பணி தொடை நரம்பின்*
***(பதி. 57:7)***

*பாணர் புரவல பரிசிலர் வெறுக்கை*
***(பதி. 65:11)***

பரிபாடல்

*என் பாணி நில் நில் எலாஅ பாணி நீ நின் சூள்*
***(பரி. 8:56)***

*கேட்டுதும் பாணி எழுதும் கிணை முருகன்*
***(பரி. 8:81)***

*பாடுவார் பாணி சீரும் ஆடுவார் அரங்க தாளமும்*
***(பரி. 8:109)***

*பாடல் பயின்றோரை பாணர் செறுப்பவும்*
***(பரி. 9:73)***

*ஆடுவார் ஆடல் அமர்ந்த சீர் பாணி*
*நல்ல கமழ் தேன் அளி வழக்கம் எல்லாமும்*
***( பரி.10:117-118)***

*ஒருதிறம் பாணர் யாழின் தீம் குரல் எழ*
***(பரி. 17:9)***

*பூத்தன பாணா நின் பாட்டு*
***(பரி. 18:21)***

*இட்டார்க்கு யாழ் ஆர்த்தும் பாணியில் எம் இழையை*
***(பரி.20:57)***

*பாணி முழவு இசை அருவி நீர் ததும்ப*
***(பரி. 21:36)***

*தெரி மருதம் பாடுப பிணி கொள் யாழ் பாணர்*
*பாடி பாடி பாய் புனல்*
***(பரி.24:73-74)***

கலித்தொகை

*முலை அணிந்த முறுவலாள் முன் பாணி தருவாளோ*
***(கலி.1:13)***

*பாணியும் தூக்கும் சீரும் என்று இவை*
***(கலி.1:15)***

*இளமையும் காமமும் நின் பாணி நில்லா*
***(கலி.12:12)***

*பாணன் புகுதராக்கால்*
***(கலி. 70:23)***

*எடுத்து சூள் பல உற்ற பாணன் வந்தீயான்*
***(கொல் (கலி. 71:14)***

*பண்ணினால் களிப்பிக்கும் பாணன் காட்டு என்றானோ*
***(கலி. 72:10)***

*நின் புகழ் பல பாடும் பாணனும் ஏமுற்றான்*
***(கலி. 74:7)***

*நோய் சேர்ந்த திறம் பண்ணி நின் பாணன் எம் மனை*
***(கலி. 77:18)***

*எல்இழாய் சேய் நின்று நாம் கொணர்ந்த பாணன் சிதைந்து ஆங்கே*
***(கலி. 81:16)***

*விளித்து நின் பாணனோடு ஆடி அளித்தி*
***(கலி. 95:31)***

*ஏதில் பெரும் பாணன் தூது ஆட ஆங்கே ஓர்*
***(கலி. 96:35)***

*பாணன் புணை ஆக புக்கு **(கலி. 98:19)***

*சொல்லுக பாணியேம் என்றார் அறைக என்றார் பாரித்தார்*
***(கலி.102:13)***

*தண்ணுமை பாணி தளராது எழூஉக*
***(கலி.102:34)***

அகநானூறு

*தொடி மாண் உலக்கை தூண்டு உரல் பாணி*
*நெடுமால் வரைய குடிஞையோடு இரட்டும்*
***(அகம். 9:12-13)***

*மாண் இழை நெடும் தேர் பாணி நிற்ப*
***(அகம். 50:4)***

*பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்*
***(அகம். 56:10)***

*ஐது அமை பாணி இரீஇ கைபெயரா*
***(அகம். 98:17)***

*பந்து புடைப்பு அன்ன பாணி பல் அடி*
***(அகம். 105:9)***

*களிறு பெறு வல்சி பாணன் எறியும்*
***(அகம். 106:12)***

*எழாஅ பாணன் நல் நாட்டு உம்பர்*
***(அகம். 113:17)***

*எவ்வி வீழ்ந்த செருவில் பாணர்*
*கைதொழு மரபின் முன் பரித்து இடூஉ பழிச்சிய*
***(அகம். 115:8-9)***

*வாஅ பாணி வயங்கு தொழில் கலிமா*
***(அகம். 134:7)***

*கனை குரல் கடும் துடி பாணி தூங்கி*
***(அகம். 159:9)***

*ஆய் குழல் பாணியின் ஐது வந்து இசைக்கும்*
***(அகம்.225:8)***

*வலி மிகும் முன்பின் பாணனொடு மலி தார்*
***(அகம். 226:13)***

*பாணன் வந்தனன் தூதே நீயும்*
***(அகம். 244:11)***

*வல் வாய் கடும் துடி பாணியும் கேட்டே*
***(அகம்.261:15)***

*நல் வேல் பாணன் நல் நாட்டு உள்ளதை*
***(அகம். 325:17)***

*பாணர் ஆர்ப்ப பல் கலம் உதவி*
***(அகம். 331:11)***

பண் அமை நல் யாழ் பாணனொடு விசி பிணி
(அகம். 346:13)
பாணி பிழையா மாண் வினை கலி மா
(அகம். 360:11)
இடியும் முழக்கும் இன்றி பாணர்
வடியுறு நல் யாழ் நரம்பு இசைத்து அன்ன
(அகம். 374:7-8)
நாணினென் பெரும யானே பாணன்
மல் அடு மார்பின் வலியுற வருந்தி
(அகம். 386:3-4)

புறநானூறு

பாணர் தாமரை மலையவும் புலவர்
(புறம்.12:1)
பாடு இன் பனுவல் பாணர் உய்த்து என
(புறம். 27:2)
அமலை கொழும் சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலா செல்வம் முழுவதும் செய்தோன்
(புறம். 34:14-15)
பாணர் மண்டை நிறைய பெய்ம்மார்
(புறம்.115:2)
பாணர் சென்னி பொலிய தைஇ
(புறம்.126:2)
பாணர் படுநர் பரிசிலர் ஆங்கு அவர்
(புறம்.135:16)
பாணன் சூடிய பசும்பொன் தாமரை
(புறம். 141:1)
பாணர் காண்க இவன் கடும்பினது இடும்பை
(புறம்.173:2)
ஈர்ம் தண் முழவின் பாணி ததும்ப
(புறம். 194:2)
படு திரை இன் சீர் பாணி தூங்கும்
(புறம். 209:5)
தெரி இழை மகளிர் பாணி பார்க்கும்
(புறம். 209:17)
யாணர் நல் நாட்டுள்ளும் பாணர்
பைதல் சுற்றத்து பசி பகை ஆகி
(புறம். 212:6-7)
அரும் தலை இரும் பாணர் அகல் மண்டை துளை உரீஇ
(புறம். 235:10)

பாணன் சூடான் பாடினி அணியாள்
( புறம். 242:3)
பாணர் சென்னியும் வண்டு சென்று ஊதா
(புறம்.244:1)
இன்றும் வரும் (கொல் பாணரது கடும்பே
(புறம். 264:7)
பாணன் கையது தோலே காண்வர
(புறம். 285:4)
ஐது அமை பாணி வணர் கோட்டு சீறியாழ்
(புறம். 302:5)
கை வார் நரம்பின் பாணர்க்கு ஒக்கிய
(புறம். 302:6)
அவன் எம் இறைவன் யாம் அவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்று தன்
(புறம். 316: 4-5)
பாணர் நரம்பின் சுகிரொடு வயமான்
(புறம். 318:5)
பாணரொடு இருந்த நாண் உடை நெடுந்தகை
(புறம். 324:12)
யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு
(புறம். 326:11)
பசித்த பாணர் உண்டு கடை தப்பலின்
(புறம். 327:4)
பாணி நெடும் தேர் வல்லரோடு ஊரா
(புறம். 333:16)
பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும்
(புறம். 334:6)
துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
(புறம். 335:7)
கவி கை வாள் வலத்து ஒழிய பாணரில்
பாடி சென்றாஅர் வரல் (தோறு அகம் மலர
(புறம். 337:3-4)
பாணன் சென்னி கேணி பூவா
(புறம். 364:2)
பாணர் ஆரும் அளவை யான் தன்
(புறம். 376:5)
விரல் விசை தவிர்க்கும் அரலை இல் பாணியின்
இலம்பாடு அகற்றல் யாவது புலம்பொடு
(புறம்.381:14-15)

பொய்கை பூ முகை மலர பாணர்
கை வல் சீறியாழ் கடன் அறிந்து இயக்க
(புறம். 398:4-5)

பொருநராற்றுப்படை
பாடின பாணிக்கு ஏற்ப நாள்(தொறும்
(பொரு.48)
இரு சீர் பாணிக்கு ஏற்ப விரி கதிர்
(பொரு. 71)
ஒள் நுதல் விறலியர் பாணி தூங்க
(பொரு. 110)

சிறுபாணாற்றுப்படை
அறல் குழல் பாணி தூங்கியவரொடு
(சிறு. 162)
நயவர் பாணர் புன்கண் தீர்த்த பின்
(சிறு. 248)

குறிஞ்சிப்பாட்டு
சொல்லல் பாணி நின்றனன் ஆக
(குறி. 152)

மதுரைக்காஞ்சி
பாணர் உவப்ப களிறு பல தரீஇ
(மது.219)
பாணர் வருக பாட்டியர் வருக
(மது.749)

மலைபடுகடாம்
நொடி தரு பாணிய பதலையும் பிறவும்
(மலை.11)
விருந்தின் பாணி கழிப்பி நீள்மொழி
(மலை. 539)

பொருநர்

ஒருவரைப்போல் வேடமிட்டு ஆடுவது பொருநர்களின் கலையாக இருந்து வந்துள்ளது. பொருநர்கள் போர்களம் பாடுநர், ஏர்களம்பாடுநர்என இருவகையாக இருந்துள்ளனர். பத்துப்பாட்டினுள் அமைந்த பொருநராற்றுப்படை போர்களம் பாடும் பொருநனைச் சுட்டுகிறது. ஏர்களம் பாடும் பொருநர்களின் பாடல்கள் ஏர்மங்கலம் பற்றியதாகவும் நாட்டின் வளம் சார்ந்தாகவும் அமைகின்றன. பொருநர்களுடன்அவர்தம் மனைவிகளான விறலியரும் வேடமிட்டு நடனமாடுவர். சங்ககால இலக்கியங்களில் இவர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

நற்றிணை
கானல் அம் தொண்டி பொருநன் வென் வேல்
(நற். 18:4)

பதிற்றுப்பத்து
கல் உயர் நேரி பொருநன்
செல்வ கோமான் பாடினை செலினே
( பதி. 67:22-23)

பரிபாடல்
குரு மணி யானை இயல் தேர் பொருநன்
திருமருத முன்துறை முற்றம் குறுகி
(பரி. 24:71-72

அகநானூறு
வள் வாய் அம்பின் கோடை பொருநன்
பண்ணி தைஇய பயம் கெழு வேள்வியின்
(அகம். 13:10-11)
வருவர் வாழி தோழி பொருநர்
செல் சமம் கடந்த வில் கெழு தட கை
( அகம். 25:18-19)
இருங்கோ வேண்மான் இயல் தேர் பொருநன் என்று
(அகம். 36:19)
அவை புகு பொருநர் பறையின் ஆனாது
(அகம். 76:5)
தோளா முத்தின் தெண் கடல் பொருநன் திண் தேர் செழியன் பொருப்பின் கவாஅன்
(அகம். 137:13-14)
பேர் இசை கொற்கை பொருநன் வென் வேல்
(அகம். 296:10)
எதிர் தலைக்கொண்ட ஆரிய பொருநன்
நிறை திரள் முழவு தோள் கையகத்து ஒழிந்த
(அகம். 386:5-6)

புறநானூறு

முழவு தோள் முரண் பொருநர்க்கு
இரு நிலத்து அன்ன நோன்மை
(புறம். 14:17-18)

அறம் துஞ்சு உறந்தை பொருநனை இவனே
(புறம். 58:9)

வைகல் யாணர் நல் நாட்டு பொருநன்
எஃகு விளங்கு தட கை இயல் தேர் சென்னி
(புறம். 61:12-13)

மன்பதை புரக்கும் நல் நாட்டு பொருநன்
உட்பகை ஒரு திறம் பட்டு என புள் பகைக்கு
(புறம். 68:10-11)

பொருநர்க்கு ஓங்கிய வேலன் ஒரு நிலை
(புறம். 69:13)

இரு மருந்து விளைக்கும் நல் நாட்டு பொருநன்
கிள்ளிவளவன் நல் இசை உள்ளி
(புறம். 70:9-10)

சுரியல் அம் பொருநனை காண்டிரோ என
(அகம். 76:9)

பொருநனும் இளையன் கொண்டியும் பெரிது என
(புறம். 78:6)

ஊர் கொள வந்த பொருநனொடு
ஆர் புனை தெரியல் நெடுந்தகை போரே
(புறம். 82:5-6)

எம்முளும் உளன் ஒரு பொருநன் வைகல்
(புறம். 87:3)

பொருநரும் உளரோ நும் அகன் தலை நாட்டு என
(புறம். 89:4)

பொருநரும் உளரோ நீ களம் புகினே
(புறம். 90:13)

தடவு நிலை பலவின் நாஞ்சில் பொருநன்
மடவன்(மன்ற செம் நா புலவீர்
(புறம். 140:1-2)

ஓங்கு இரும் கொல்லி பொருநன்
ஓம்பா ஈகை விறல் வெய்யோனே
(புறம். 152:31-32)

பொருநர்க்கு உலையா நின் வலன் வாழியவே
(புறம். 169:12)

பறை இசை அருவி நல் நாட்டு பொருநன்
நோயிலன் ஆயின் நன்று(மன்(தில் என
(புறம். 229:14-15)

பொருநர்க்கு அல்லது பிறர்க்கு ஆகாதே
(புறம். 342:6)

பொருநர் காணா செரு மிகு முன்பின்
(புறம். 365:6)

நலங்கிள்ளி நசை பொருநரேம்
பிறர் பாடி பெறல் வேண்டேம்
(புறம். 382:5-6)

பொராஅ பொருநரேம்
குணதிசை(நின்று குட முதல் செலினும்
(புறம். 386:19-20)

தீம் சுளை பலவின் நாஞ்சில் பொருநன்
துப்பு எதிர்ந்தோர்க்கே உள்ளா சேய்மையன்
(புறம். 380:8-9)

தண் சோழநாட்டு பொருநன்
அலங்கு உளை அணி இவுளி
(புறம். 382:3-4)

எம்மும் உள்ளுமோ பிள்ளை அம் பொருநன்
என்று ஈத்தனனே இசை சால் நெடுந்தகை
(புறம். 389:5-6)

புன் தலை பொருநன் அளியன் தான் என
(புறம். 390:12)

அளியன் ஆகலின் பொருநன் இவன் என
(புறம். 391:12)

திருமுருகாற்றுப்படை

பொருநர் தேய்த்த போர் அரு வாயில்
(திரு. 69)

சிறுபாணாற்றுப்படை

பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்
(சிறு. 203)

மதுரைக்காஞ்சி

ஆர் அணங்கு ஆகிய மார்பின் பொருநர்க்கு
உரு கெழு பெரும் சிறப்பின்
(மது. 99-100)

விறலி

விறலி என்ற சொல் பெண்ணைக் குறிப்பதாகும். விறலியைப் பாண்மகள்

என்றும் அழைப்பதுண்டு. களவு வாழ்வில் தலைவன் தலைவியை விட்டுப் பரத்தையோடு இருந்துவிட்டு, வீடு திரும்பும்பொழுது ஏற்படும் ஊடல் தணிவிக்கும் வாயில்களுள் விறலியும் ஒன்று. பாணன், பொருநன், கூத்தன் ஆகிய கலைஞர்களுடன் உடன் கலைநிகழ்த்தும் கலைஞராக விறலியரே இருந்துள்ளனர்.

நற்றிணை

*கலம் பெறு விறலி ஆடும் இ ஊரே*
*(நற். 328:11)*

பதிற்றுப்பத்து

*கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே*
*(பதி. 18:6)*

*செல்லாயோ தில் சில் வளை விறலி*
*மலர்ந்த வேங்கையின் வயங்கு இழை அணிந்து*
*(பதி. 40:21-22)*

*பாடு விறலியர் பல் பிடி பெறுக*
*(பதி. 43:22)*

*நல் நுதல் விறலியர் ஆடும்*
*(பதி. 47:7)*

*ஒண் நுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி*
*(பதி. 48:2)*

*துயிலும் கோதை துளங்கு இயல் விறலியர்*
*கொளை வல் வாழ்க்கை நும் கிளை இனிது உணீஇயர்*
*(பதி. 49:2-3)*

*அமிழ்து பொதி துவர் வாய் அசை நடை விறலியர்*
*பாடல் சான்று நீடினை உறைதலின்*
*(பதி. 51:21-22)*

*மின் இழை விறலியர் நின் மறம் பாட*
*(பதி. 54:6)*

*செல்லாமோ தில் சில் வளை விறலி*
*பாணர் கையது பணி தொடை நரம்பின்*
*(பதி. 57:6-7)*

*ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்*
*(பதி. 58:1)*

*சில் வளை விறலி செல்குவை ஆயின்*
*(பதி. 78:3)*

பரிபாடல்

*ஒருதிறம் பாடல் நல் விறலியர் ஒல்குபு நுடங்க*
*(பரி. 17:15)*

அகநானூறு

*நனவு புகு விறலியின் தோன்றும் நாடன்*
*(அகம். 82:10)*

*விழவு கொள் மூதூர் விறலி பின்றை*
*(அகம். 352:5)*

புறநானூறு

*ஒண் நுதல் விறலியர் பூ விலை பெறுக என*
*(புறம். 32:4)*

*சில் வளை விறலியும் யானும் வல் விரைந்து*
*(புறம். 60:5)*

*செல்லாமோ தில் சில் வளை விறலி*
*களிற்று கணம் பொருத கண் அகன் பறந்தலை*
*(புறம். 64:2-3)*

*இன் நகை விறலியொடு மென்மெல இயலி*
*(புறம். 70:15)*

*மடவரல் உண்கண் வாள் நுதல் விறலி*
*பொருநரும் உளரோ நும் அகன் தலை நாட்டு என*
*(புறம். 89:3-4)*

*சுரன் முதல் இருந்த சில் வளை விறலி*
*செல்வை ஆயின் சேணோன் அல்லன்*
*( புறம்.103:4-5)*

*சே இழை பெறுகுவை வாள் நுதல் விறலி*
*தடவு வாய் கலித்த மா இதழ் குவளை*
*( புறம். 105:1-2)*

*விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின் வர*
*(புறம். 109:16)*

*மெல் இயல் விறலி நீ நல் இசை செவியின்*
*(புறம். 133:1)*

*வளை கை விறலி என் பின்னள் ஆக*
*(புறம். 135:4)*

கொடி மருங்குல் விறலியருமே
வாழ்தல் வேண்டி
(புறம். 139:4-5)

வளை கை விறலியர் படப்பை கொய்த
(புறம். 140:3)

மாண் இழை விறலி மாலையொடு விளங்க
(புறம். 141:2)

பாடுவல் விறலி ஓர் வண்ணம் நீரும்
(புறம். 152:13)

ஒளி திகழ் முத்தம் விறலியர்க்கு ஈந்து
(புறம். 170:11)

பாடு வல் விறலியர் கோதையும் புனைக
(புறம். 172:3)

விறலியர் முன்கையும் தொடியின் பொலியா
(புறம். 244:2)

துடிய பாண பாடு வல் விறலி
என் ஆகுவிர்(கொல் அளியிர் நுமக்கும்
(புறம். 280:8-9)

பொருநராற்றுப்படை

ஒள் நுதல் விறலியர் பாணி தூங்க
(பொரு. 110)

சிறுபாணாற்றுப்படை

மட மான் நோக்கின் வாள் நுதல் விறலியர்
நடை மெலிந்து அசைஇய நன் மென் சீறடி
(சிறு. 31-32)

பெரும்பாணாற்றுப்படை

தொடை அமை மாலை விறலியர் மலைய
(பெரும். 486)

மதுரைக்காஞ்சி

விறலியர் வறும் கை குறும் தொடி செறிப்ப
(மது. 218)

மலைபடுகடாம்

இலங்கு வளை விறலியர் நின் புறம் சுற்ற
(மலை. 46)

செறி தொடி விறலியர் கைதொழூஉ பழிச்ச
(மலை. 201)

இறும்பூது கஞலிய இன் குரல் விறலியர்
நறும் கார் அடுக்கத்து குறிஞ்சி பாடி
(மலை. 358-359)

கடவது அறிந்த இன் குரல் விறலியர்
தொன்று ஒழுகு மரபின் தம் இயல்பு வழாஅது
(மலை. 536-537)

தலைவன் தாமரை மலைய விறலியர்
சீர் கெழு சிறப்பின் விளங்கு இழை அணிய
(மலை. 569-570)

கூத்து, கூத்தர் என்ற சொல் கலித்தொகையில் 2 இடங்களிலும், புறநானூற்றில் 1 இடத்திலும் வந்துள்ளது. பாணர் என்ற சொல் நற்றிணை (6), குறுந்தொகை (7), ஐங்குறுநூறு(11), பதிற்றுப்பத்து (5), பரிபாடல் (4), கலித்தொகை (9), அகநானூறு (11), புறநானூறு(26), சிறுபாணாற்றுப்படை(1), குறிஞ்சிப்பாட்டு (1), மதுரைக்காஞ்சி (2), ஆகிய இலக்கியங்களில் வரப்பெற்றுள்ளது. பாணி என்ற சொல் நற்றிணை (5), குறுந்தொகை (3), பதிற்றுப்பத்து (1), பரிபாடல்(6),கலித்தொகை(5),அகநானூறு (9), புறநானூறு (6), பொருநராற்றுப்படை (3), சிறுபாணாற்றுப்படை (1), குறிஞ்சிப் பாட்டு (1), மலைபடுகடாம் (2) ஆகிய இலக்கியங்களில் பயின்றுவருகிறது. பாணி என்ற சொல் இங்கு இசையோடு சேர்ந்த வினைச்சொல்லாக இங்கு பயன்படுத்தப் பட்டுள்ளது.

மேலும், பொருநர் என்ற சொல் நற்றிணை (1), பரிபாடல் (1), அகநானூறு (7), புறநானூறு (26), திருமுருகாற்றுப்படை (1), சிறுபாணாற்றுப்படை (1), மதுரைக்காஞ்சி (1) ஆகிய இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது.

விறலி என்ற சொல் நற்றிணை (1), பதிற்றுப்பத்து (11), பரிபாடல் (1), அகநானூறு (2), புறநானூறு (17), பொருநராற்றுப்படை (1), சிறுபாணாற்றுப்படை (1), பெரும் பாணாற்றுப்படை (1), மதுரைக்காஞ்சி (1),

மலைபடுகடாம் (5) ஆகிய இடங்களில் வரப்பெற்றுள்ளது.

சங்க இலக்கியமான பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் தொடர்பான சொற்களின் வருகை முறையினை மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் காண்போமானால், இக்கலைஞர்களின் பங்களிப்பு சங்கச் சமூகத்தில் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளதை அறியமுடிகிறது. வறுமையிலும் நேர்மையுடன் வாழும் மனிதநேயத்துடன் இவர்கள் திகழ்ந்ததையும் உணரமுடியும். இக்கலைஞர்களுக்கென்றே ஆற்றுப்படை இலக்கியத்தை வகுத்து, அதற்கென திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் என்று சொல்லப்படும் கூத்தராற்றுப்படை ஆகிய 5 இலக்கியங்களை படைத்துள்ளமையினைக் கொண்டும் இவர்களுக்குரிய மதிப்பிடத்தை அறியவும் முடிகின்றது. அதேபோல் காலமாற்றத்தாலும் வளர்ச்சியினாலும் இக்கலைஞர்களின் இக்காலவாழ்வினையும் நாம் மதிப்பிடுவது காலத்தின் தேவையாக அமைகிறது.

## துணை நூற்பட்டியல்

1. இளம்பூரணர்உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதா பதிப்பகம்
2. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
3. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
5. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
6. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தகநிலையம்
7. சுப்ரமணியம்.ச.வே., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
8. தமிழண்ணல், தொல்காப்பியம் எழுத்த திகாரம், தொகுதி - 1, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
9. தமிழண்ணல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், தொகுதி - 2, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
10. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி - 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
11. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், 2017, சென்னை, அமராவதி பதிப்பகம்